1969 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : இலங்கையில் இருந்து வந்தவர்கள் நெல்லை மாவட்டத்திலேயே அதிகமாக இருக்கிற காரணத்தினால், குற்றாலம் மலைச்சரிவில் தேயிலைத் தோட்டம் ஏற்படுத்த மாவட்ட கலெக்டர் கொடுத்த திட்டம் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றிய குறிப்பு இங்கு இல்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : இலங்கையில் இருந்து வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை அதிகம். கோடைக்கானல் பகுதியில் விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாதவர்கள் மிக அதிக மான நிலங்களைக் கையகப்படுத்தி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பகுதியை நீக்கிக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : இந்த நிலங்களை இலங்கை அகதிகளுக்கு வழங்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கொடைக்கானல் மலைப் பிரதேசத்தில் ஆக்கிரமிப்பு இருப்பதை உணர்ந்து அரசாங்கம் தனிப்பட்ட அதிகாரியைப் போட்டு, அதுபற்றிய விவரங்களைச் சேகரித்து, அந்த நிலங்களை எடுத்து நிலமில்லாத ஏழை விவசாயி களுக்கு அளிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. அந்த வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஜே. பெள்ளி கௌடர் : கொடைக்கானல் மலைப்பகுதியில் இலங்கையில் இருந்து வந்துள்ள அகதிகளைக் குடியேற்ற எத்தனை ஏக்கரா எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதுள்ள விவ காரம் அங்கே தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டம் போட லாமா, கூடாதா என்பதுதான். அங்கே வாட்டில் மரம் தான் வளர்க்க முடியும் என்று காட்டிலாக்கா சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். ரெவின்யூ போர்டில் காப்பித்தோட்டம், தேயிலைத் தோட்டம் போடலாம் என்கிறார்கள். இதுபற்றி இன்னும் முடிவு ஏற்படவில்லை. அந்தப் பிரதேச மண் கோயம்பத்தூர் விவசாயக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. காட்டிலாக்கா அமைச்சரும், நானும் நேரில் போய்ப் பார்த்து ஒரு முடிவு செய்யவிருக்கிறோம்.

புதுக்கோட்டை கோட்டத்திலுள்ள இனாம் கிராமங்கள்

* 240 **வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை டிவிஷனில் இனாம் கிராமங்களில் ரீசெட்டில்மெண்டிற்காக அரசு என்னென்ன துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புதுக்கோட்டை கோட்டத்தில் நிலவரி ஏற்பாட்டுப் பணியை விரைந்து நடத்தி இயன்ற விரைவில் அதை முடிக்கும் நோக்கத்துடன், அரசாங்கம் மேற்கொண்டும் நிலவரி ஏற்பாட்டு உதவி அதிகாரிகள் நால்வரையும் தேவையான நேரிடப்பணியாளர்களையும் நியமித்து நிலவரி ஏற்பாட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கையைப் பெருமளவிற்கு அதிகரித்துள்ளது. மேலும், நிலவரி ஏற்பாட்டு விசாரணையை நிலவரி ஏற்பாட்டுத் தாசில்தார்கள் நடத்துவதற்குப் பதிலாக, நிலவரி ஏற்பாட்டு உதவி அதிகாரிகளே நடத்தவேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : புதுக்கோட்டை டிவிஷனில் உள்ள இனம் கிராமங்களை ரீ-செட்டில்மென்ட் செய்வதற்கு எத்தனை அதிகாரிகள், எப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? வேலையை எப்போது ஆரம்பித்தார்கள்? எப்போது முடிவுறும்? நிலக்காரர்களுக்குப் பட்டா வழங்கும் உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விவகாரம் படிப்படியாகச் செய்யப்பட்டு வருகிறது. இதுபற்றிய மசோதா சட்டமன்றத்தில் நிறைவேறியதை கனம் உறுப்பினர் மறந்திருக்க மாட்டார். இனம், மைனர் இனம் என்ற இனத்தில் முதலில் 82 கிராமங்கள் எடுக்கப்பட்டன. பிறகு பல மைனர் இனங்களையும் எடுக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்தது. செட்டில்மென்ட் தாசில்தார் தான் இந்த வேலையைக் கவனித்தார். பிறகு 116 கிராமங்களில் உள்ள சிறிய சிறிய இனங்களையும் எடுக்கவேண்டுமென்ற கிளர்ச்சி வந்தபோது தனியாகவே அதிகாரிகள் இதற்காகப் போட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, புதுக்கோட்டைப் பிரதேசத்தில் இனம் கிராமங்களை எடுத்துவிடுவதற்காக ஒரு விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டு அவர் ஒரு அறிக்கையை இது சம்பந்தமாக அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே கண்டிருக்கின்ற பிரகாரம் எல்லாக் கிராமங்களையும் இனம் ஒழிப்பிலே கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கம் அப்படித்தான் 114 கிராமங்களைக் கொண்டுவந்து, அதற்காக முடிவெடுத்து, இந்த மன்றத்திலே அதற்கான மசோதாவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலேகூட இது இறுதியான முடிவு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

Fishing Harbour in Tamil Nadu

* 241 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) Whether any sanction has been accorded by the Government of India for the construction of a fishing harbour in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?